DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
----

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, SATHANKULAM

| | |
|---|---|
| Case No : CC.No.85/2019 | Deposition of Witness for : PW3 |
| Name : கொம்பாட்சி | Father/Husband Name : காசிலிங்கம் |
| Age : 54 | Village : மேலவெள்ளமடம் |
| Taluk : ஏரல் | Calling : கூலிவேலை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the 18 May 2026.
Accused Present.

**முதல் விசாரணை** :-

1. நான் தற்போது மேலவெள்ளமடத்தில் குடியிருந்து கூலிவேலை செய்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும், உறவினர் ஆவார். ப.சா.1 ஐ தெரியும், எனது தம்பி ஆவார். எங்கள் ஊரைச் சேர்ந்த எதிரி பட்டுராஜன் மற்றும் எனது தம்பி ப.சா.1 கணேசன் என்பவருக்கும் இடப்பிரச்சனை காரணமாக முன்விரோதம் இருந்து வருகிறது. கடந்த 18.03.2019 ஆம் தேதி மதியம் சுமார் 3 மணியளவில் மேலவெள்ளமடம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளி பக்கம் எதிரி மற்றும் ப.சா.1 ஆகியோர் வந்தபோது எதிரி ப.சா.1 ஐ கல்லால் ப.சா.1 ன் நெற்றி, தலை ஆகிய இடங்களில் தாக்கி இரத்தக்காயம் ஏற்படுத்தினார். நான் வீட்டில் இருந்தபோது ப.சா.1 இரத்தக் காயத்தோடு வீட்டிற்கு வந்து நடந்த பிரச்சனையைப் பற்றி கூறினார். காயம்பட்ட ப.சா.1 ஐ நான் ஸ்ரீவைகுண்டம் அரசு மருத்துவமனையில் சிசிக்சைச்காக சேர்த்தேன். அங்கு அவர் 8 நாட்கள் சிகிச்சையில் இருந்தார். இதுசம்பந்தமாக ப.சா.1 புகார் வாக்குமூலம் அளித்தார். போலீசார் என்னை விசாரித்தார்கள்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை** :

2. வழக்கு சம்பவம் குறித்து எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. பாதை சம்பந்தமாக சர்வே நம்பர், அந்த இடத்தின் அளவு போன்ற விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். பள்ளிக்கூடத்திற்கும் வழக்கு சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 6 வீடுகள் தள்ளி உள்ளது. ப.சா.1 ன் மேல் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் ப.சா.1 ன் மேல் ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். பள்ளிக்கூடத்தில் கேமரா உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் அது தற்போதுதான் வைக்கப்பட்டுள்ளது. நான் சொன்னமமாதிரி எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் ப.சா.1 என்னுடைய தம்பி என்பதாலும் ப.சா.1 ன் மீது உள்ள வழக்கில் இருந்து தப்பிப்பதற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.


DEVI RAKSHA M V
Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.05.18 17:24:20 +0530

**<u>மறுவிசாரணை</u>** : இல்லை

Taken down by me/before me in open court, interpreted/read over to the witness and admitted by the deponent to be correct.

DEVI RAKSHA M V

Digitally signed by DEVI RAKSHA M V
Date: 2026.05.18 17:24:27 +0530

Judicial Magistrate, Sathankulam.